சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.18.03.2025

SC.NO.137/2023

PW13 (Lw14) : பிரபு (வயது 41 ) த/பெ.அர்ச்சுணன்

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )

(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டம், பாடாலூர் காவல் நிலைய வட்ட காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நான் கடந்த 2022 ஆம் ஆண்டு இலால்குடி வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கல்லக்குடி காவல் நிலைய குற்ற எண்.85/2022 ச.பி 294(பி), 307 இதச வின் கீழ் பதியப்பட்ட வழக்கு கோப்பை இலால்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பு, இலால்குடி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடமிருந்து கடந்த 17.06.2022 ஆம் தேதி மேற்படி வழக்கு கோப்பை எனது பொறுப்பில் எடுத்துக்கொண்டு, வழக்கின் சம்பவ இடத்திற்கு சென்று, சம்பவ இடத்தை பார்வையிட்டும் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் மற்றும் சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்தும், சாட்சிகள் ஏற்கனவே பொறுப்பு காவல் ஆய்வாளரிடம் கூறிய வாக்குமூலத்தையே என்னிடமும் கூறியதால் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பின்னர் கடந்த 14.10.2022 ஆம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட கார்த்திக் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த இலால்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் ராதாகிருஷ்ணன் என்பவரையும், மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் கார்த்திக் என்பவரையும் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த கல்லக்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவரையும் விசாரணை செய்து, வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். வாக்குமூலங்கள் பதிவு செய்தததிலிருந்தும், ஆவணங்களையும் சான்று பொருட்களையும் பார்வையிட்டதிலிருந்தும் எதிரி மீது 294(பி), 307 இதச வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ய முகாந்திரம் இருந்ததால் 14.10.2022 ஆம்தேதி எதிரி மீது இறுதி அறிக்கை தயார் செய்து, கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் 17.06.2022 ஆம் தேதி நான் தற்செயல் விடுப்பு முடித்து காவல் நிலையத்தில் அறிக்கை செய்தபோது பொறுப்பு காவல் ஆய்வாளர் வழக்கு கோப்பை எனது பொறுப்பில் ஒப்படைத்த போது எனக்கு தெரியும். வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளரை எந்த தேதியில் எத்தனை மணிக்கு, எந்த இடத்தில் வைத்து விசாரித்தேன் என்றால் 14.10.2022 ஆம் தேதி கல்லக்குடி காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன், நேரம் தெரியவில்லை. காலையா, மாலையா என்றால் காலையில் விசாரித்தேன். காலை சுமார் 11.00 மணி இருக்கும். வழக்கில் காயம்பட்ட நபருக்கு முதலுதவி சிகிச்சை செய்த மருத்துவரை எந்த தேதியில் எத்தனை மணிக்கு எந்த இடத்தில் வைத்து விசாரித்தேன் என்றால் 14.10.2022 அன்று இலால்குடி அரசு மருத்துவமனையில் வைத்து நண்பகல் சுமார் 12.00 முதல் 12.30 மணிக்குள் விசாரித்தேன். மேல் சிகிச்சை செய்த திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவரை எந்த தேதியில் எத்தனை மணிக்கு எந்த இடத்தில் வைத்து விசாரித்தேன் என்றால் 14.10.2022 அன்று திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் வைத்து நண்பகல் சுமார் 3.00 முதல் 4.00 மணிக்குள் விசாரித்தேன். 14.10.2022 அன்று இறுதி அறிக்கை தயார் செய்து, நீதிமன்ற கோப்பிற்கு எடுக்க, நீதிமன்ற காவலருக்கு அறிவுரை வழங்கி அவர் வசம் ஒப்படைத்தேன். ஒப்படைத்த நேரம் சரியாக ஞாபகம் இல்லை. திருச்சி அரசு மருத்துவமனையிலிருந்து இலால்குடி வருவதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்றால் சுமார் ஒரு மணி நேரம் ஆகும். திருச்சி அரசு மருத்துவமனையில் 4.00 மணிக்கு விசாரணை செய்து முடித்த உடன் இலால்குடிக்கு மாலை 5.00 மணிக்கு வந்திருக்கலாம் என்றால் நேரம் சரியாக ஞாபகம் இல்லை வேறு அலுவலில் இருந்திருக்கலாம். நான் வேறு அலுவலில் இருந்ததால், நான் சொன்ன தேதியில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, 14.10.2022 ஆம் தேதி அன்று தான் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்ற காவலர் வசம் ஒப்படைத்தேன். மாலை 5.00 மணிக்கு மேல் இறுதி அறிக்கை தயார் செய்து, அன்றைய தினமே நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்க வாய்ப்பில்லை என்றால் இறுதி அறிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய, நீதிமன்ற காவலருக்கு அறிவுரை வழங்கி காவலரிடம் ஒப்படைத்துவிட்டேன். நீதிமன்ற

காவலர் அன்றைய தினமே நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கை நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல், இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சாட்சிகளான முதலுதவி சிகிச்சை செய்த மருத்துவர், மேல் சிகிச்சை செய்த மருத்துவர், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் ஆகியோர்களை நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு தேவையான விவரங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல், எதிரி மீது தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** - இல்லை

/ signed /
பிரபு

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/- Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி